அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 32/2017

எனது இல. : EST 5/4/24(XXVII)
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.12.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்
பிரதம மாகாண செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க சேவையின் மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்களை வகைப்படுத்தல்**

அரசாங்க சேவையினதும் மாகாண அரசாங்க சேவையினதும் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் பொருட்டு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட வேண்டும் என 2017.12.05 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. 2006.04.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 மற்றும் அதன் திருத்தமாக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றுக்குப் பதிலாக 2016.02.23 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அமைய, "அரசாங்க சேவையின் சம்பள மறுசீரமைப்பு – 2016" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2016.02.25 ஆந் திகதிய 03/2016 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

03. மேற்படி சுற்றறிக்கை இல. 11 இன் கீழ் பின்வருமாறு அரசாங்க சேவையின் பதவிகள் / சேவைகள் மீள் வகுப்பீடு செய்வதற்குறிய உப பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

"11.1 அரசாங்க சேவையின் பதவிகள்/ சேவை மீள்வகுப்பீடு III ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன."

"11.2 பதவிநிலை அலுவலர் எனப்படுபவர், மூன்றாம்நிலை மற்றும் சிரேஷ்ட மட்டத்திற்குரிய பதவியொன்றுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள அலுவலரொருவராவார்."

"11.3 இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதியில் நிலவிய ஏற்பாடுகளின் கீழ் பதவிநிலை தரத்திற்குட்பட்டுள்ள அலுவலரொருவர் மென்மேலும் அவருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் வண்ணம் பதவிநிலை அலுவலராக கருதப்படுவர்."

04. இதன் 11.1 உப பிரிவிற்கமைய அரசாங்க சேவையின் பதவிகள்/ சேவை மீள்வகுப்பீடு என்பன காட்டப்பட்டுள்ள III ஆம் அட்டவணையில் கீழுள்ளவாறு அரசாங்க சேவையின் பதவிகள்/ சேவை மீள்வகுப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆரம்ப மட்டம்**

ஆரம்ப தரம் - தேர்ச்சி அற்ற
ஆரம்ப தரம் - பகுதி தேர்ச்சி பெற்ற
ஆரம்ப தரம் - தேர்ச்சிபெற்ற

**இரண்டாம்நிலை மட்டம்**

முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சாராத

முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சார்ந்த

கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்

இணைந்த அலுவலர்கள்

இலங்கை ஆசிரியர் சேவை

தாதிச்சேவை/மருத்துவத்திற்கான துணை மருத்துவ தொழில் சேவை மற்றும் இடைநிலை மருத்துவச் சேவைகள் ஆகிய சேவை வகுதிகளின் விசேட தரம் தவிர்ந்த மற்றைய சேவைகளின் பதவிகள் பொலிஸ் மற்றும் பிற கண்காணிப்பு சேவைகளின் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்குச் சமமான மட்டத்திலுள்ள பதவிகள்

**மூன்றாம்நிலை மட்டம்**

வெளிக்கள / அலுவலக அலுவலர்கள்

முகாமைத்துவ உதவியாளர் - அதியுயர் வகுப்பு

இலங்கை அதிபர் சேவை

தாதிச்சேவை/மருத்துவத்திற்கான துணை மருத்துவ தொழில் சேவை மற்றும் இடைநிலை மருத்துவச் சேவைகள் ஆகிய சேவை வகுதிகளின் விசேட தரம்

பதிவுசெய்யப்பட்ட / உதவி மருத்துவ அலுவலர்கள்

பொலிஸ் மற்றும் பிற கண்காணிப்பு சேவைகளின் பொலிஸ் பரிசோதகர்/ பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்குச் சமமான மட்டத்திலுள்ள பதவிகள்

**சிரேஷ்ட மட்டம்**

நிறைவேற்றுநர்கள்

மருத்துவ அலுவலர்கள்

சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் /வைத்திய நிபுணர்கள்

அமைச்சின் செயலாளர் மற்றும் அச் சம்பளத்தினை பெறுகின்ற பிற பதவிகள்

சட்ட அலுவலர்கள்

மேலதிக வழக்குரைஞர்/ சட்ட வரைஞர்

வழக்குரைஞர் நாயகம்

வழக்குரைஞர் நாயகம்சட்டமா அதிபர்

05. மேலே 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் 11.2 மற்றும் 11.3 பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் வகுதி பதவிநிலை அலுவலர்கள் ஆவதுடன், 11.2 இன் கீழுள்ள அலுவலர் வகுதிகள் தொடர்பான மேலதிக விளக்கம் அச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் 3 மற்றும் 4 இன் கீழ் காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 அட்டவணை III இன் 3 மற்றும் 4 இன் கீழவருகின்ற அலுவலர்கள் மற்றும் அச் சுற்றறிக்கையின் 11.3 இன் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பதவிநிலை வகுதியில் உள்ளடங்குபவர்களாவர்.

06. மேற்படி 05 இல் உறுதிபட குறிப்பிடப்படாத ஏதேனுமொரு பதவியானது, பதவிநிலைக்குரிய பதவியா அல்லது இல்லையா என்பது பற்றிய விளக்கம் தேவைப்படும் பட்சத்தில், அதனை தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு உட்படுத்த வேண்டியுள்ளதுடன், அப் பிரச்சினை தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பணியாட்தொகுதி ஆணைக்குழுவின் அவதானிப்புக்களுடன் கூடிய விளக்கம் தாபனப் பணிபாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு